**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | **122/2014** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | ஜெயம்பாண்டியன் | CASTE | : | |
| S/O | K.C. காமாட்சி | RELIGION | : | இந்து |
| VILLAGE | பாலமேடு | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **36** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.10.2025**

**குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து காலிமனையிடம் என்றால் சரிதான். எனது தகப்பனார் வழக்குச்சொத்தை கிரையம் பெற்றபின் செலுத்திய வரி ரசீதுகளை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது தகப்பனார் கிரையம் வாங்கும்முன் முந்தைய பத்திரங்களை பார்வையிட்டு வில்லங்கம் இல்லை என்று தெரிந்துகொண்டுதான் வாங்கினார். எனது தகப்பனார் முனியாண்டி சேர்வையின் வாரிசுகளான லெட்சுமி, நாகஜோதி, பெரியசாமி ஆகியோரிடம் கிரையம் வாங்கினார். எனது தகப்பனாருக்கு கிரையம் கொடுத்த நபர்கள் பேரில் வழக்குச்சொத்திற்கான உரிமை மூலஆவணம் இருந்ததா என்றால் எனக்குத்தெரியாது.

2. நான் வழக்குச்சொத்திற்கான முந்தைய ஆவணங்களை சரிபார்த்தேனா என்றால் அவற்றை பார்க்கவில்லை. முனியாண்டி சேர்வை பேரில் வழக்குச்சொத்திற்கான உரிமைமூலஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, பட்டா உள்ளது. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் முனியாண்டி சேர்வை பேரில் பட்டா, பதிவு ஆவணம் உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முனியாண்டி சேர்வையின் தகப்பனார் பெயர் தெரியாது. வழக்கின் பிரதிவாதி முனியாண்டி சேர்வைக்கு என்ன உறவுமுறை என்றால் தம்பி ஆவார்.

3. தாவா சொத்து முனியாண்டி சேர்வைக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதைக்காட்ட வழக்கில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆ பதிவேட்டில் எந்த வருடத்திற்கான ஆவணம் என்றால் அந்த ஆவணம் வழங்கப்பட்ட தேதிதான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 கிரைய ஆவணம்

14.11.2013 ம் தேதி பதியப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள முனியாண்டி சேர்வையின் வாரிசுகளின் ரேசன் அட்டையில் லெட்சுமியின் கணவர் பெயர் பெரியசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தை நான் பார்வையிட்டுள்ளேன். மேற்படி கிரைய ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள முனியாண்டி சேர்வையின் வாரிசு சான்றிதழில் மருதன்சேர்வை பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் 2 ம் பக்கத்தில் முனியாண்டி சேர்வையின் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முனியாண்டி சேர்வையின் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் எத்தனை பேர் என்றும் அவர்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்றும் வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

5. 2013 ம் ஆண்டு கிரையம் பெறுவதற்குமுன் வழக்குச்சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் மற்றும் வரி ரசீதுகளை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குச்சொத்தை கிரையம் பெறும்முன் அதற்குண்டான வருவாய் ஆவணங்களை பார்வையிடவில்லை என்றால் நான் பார்வையிடவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் பெறுவதற்காக எனது தகப்பனார் கிரையம் பெற்றபின் 23.07.2014 ம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்குச்சொத்தை கிரையம் பெற்றபின் சுவாதீனம் எடுப்பது சம்பந்தமாக வழக்குத்தரப்பினருக்கும் தகராறு ஏற்பட்டு பாலமேடு காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

6. முனியாண்டி சேர்வை இறந்த ஆண்டான 1987 லிருந்து வழக்குச்சொத்தை கிரையம் பெறும்வரை அவருக்கான இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் பெறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 சான்றிதழ் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சங்கதிகள் எழுதப்பட்ட மையும், கையெழுத்து செய்த மையும் வேறுவேறாக உள்ளது என்றால் சரிதான். (மேற்படி கேள்வி பற்றி எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று வாதி தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபணை செய்யப்பட்டது.)

7. வா.சா.ஆ.5 பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள லெட்சுமி என்பவரின் வாக்காளர் அடையாள அட்டையில் எந்த வருடம் வழங்கப்பட்டது என்றால் 1998 ம் ஆண்டு வழங்கப்பட்டது. அந்த ஆவணத்தில் அவரது கணவர் பெயர் முனியாண்டி சேர்வை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தை 3 நபர்கள் சேர்ந்து எனது அப்பா பெயரில் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பட்டா 2 நபர்கள் பெயரில்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.2 பட்டா புத்தகத்தில் பெரியசாமி தகப்பன் பெயர் முனியாண்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா புத்தகத்தில் முனியாண்டிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 2 ம் பக்கத்தில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குச்சொத்தின் அனுபவத்தில் யார் உள்ளார்கள் என்று முடிவு செய்ய குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 145 ன்கீழ் விசாரணை செய்யப்பட்டது என்றால் எனக்குத்தெரியாது.

9. எங்களது கிரையதாரர்களிடம் சுவாதீனத்தை எடுத்துத்தரக்கேட்டு அவர்கள் பிரதிவாதிகளிடம் பிரச்சனை செய்து பாலமேடு காவல்நிலையத்தில் 91/13, 2/14 ஆகிய முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் தெரியும், ஆனால் சுவாதீனத்தை எடுத்துதரச்சொல்லி நாங்கள் கேட்கவில்லை. லெட்சுமி தரப்பினர் பிரதிவாதிகளுக்கு எதிராக முதன்மை சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினைக்கேட்டு அசல் வழக்கு எண் 449/2013 தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்திற்கான சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் எனக்குத்தெரியாது.

10. எனது தகப்பனார் கிரையம் வாங்கியது 9 செண்டு. அதன் நான்குமால் எல்லை தெரியும், ஆனால் அவை யாருடைய இடம் என்று குறிப்பிட்டு எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்தின் சர்வே எண்ணின் சாலைக்கான நில ஆர்ஜிதம் செய்தார்களா என்றால் எனக்குத்தெரியாது. எனது தகப்பனார் கிரையம் வாங்கும்முன் வழக்குச்சொத்தின் வருவாய் ஆவணங்களை பார்த்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்ணில் முனியாண்டி கோவில் உள்ளது என்றால் எனக்குத்தெரியாது.

11. வழக்குச்சொத்து மருதன் சேர்வைக்கு பாத்தியப்பட்ட பாகப்பிரிவினை செய்யப்படாத சொத்து என்றாலும் அதை நாங்கள் கிரையம் பெற்றது செல்லாது என்றாலும் சரியல்ல. மருதன் சேர்வையின் வாரிசுகள் வழக்கில் முக்கியத்தரப்பினர்கள் என்றாலும் அவர்களின் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் பிரதிவாதியின் மகன்கள் மாட்டுக்கொட்டகை அமைத்து அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்குச்சொத்தில் அனுபவத்திலுள்ள நபர்களை வழக்கில் சேர்க்காமல் வயதான பிரதிவாதியை மட்டும் தீர்ப்பு பெறுவதற்காக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. வழக்குச்சொத்து நீண்ட காலமாக விவசாயம் செய்யக்கூடிய பகுதி இல்லை என்றால் சரிதான். வழக்கை தவறான நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை கிரையம் பெற்றதிலிருந்து அனுபவத்தில் இல்லை என்றாலும் தவறான பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.